செ.வெ.எண்:22 நாள்:14.02.2017

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் மாவட்ட நீதிபதி திரு.ஜி.பாலகிருஷ்ணன், தலைமை குற்றவியல் நீதிபதி திரு.எஸ்.பக்கிரிசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

“மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் தீர்ப்பில் 13 மாவட்டங்களில் சீமைக் கருவேல மரங்களை வேருடன் அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இதர மாவட்டங்களிலும் சீமைக் கருவேல மரங்களை அகற்ற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வனத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, இந்து சமய அறநிலையத்துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட அனைத்து துறையினரும் தமக்குச் சொந்தமான அலுவலக வளாகங்கள், நிலப்பரப்புகள், சாலை ஓரங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது இடங்களிலும் மற்றும் தனியாருக்குச் சொந்தமான இடங்களிலும் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை வரும் 25.02.2017 க்குள் முற்றிலுமாக வேருடன் அப்புறப் படுத்திட வேண்டும். மேலும் சீமைக் கருவேல மரங்களை ஒழிப்பது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பரங்கள், பேரணிகள் நடத்தப்பட வேண்டும்.” என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வனத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, இந்து சமய அறநிலையத்துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**